சுருக்கம்

வேளாண்மை-உழவர் நலத்துறை – 2023-2024 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கை அறிவிப்பு "ஏரிகளிலும் குளங்களிலும் படிந்திருக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் பயன்படுத்தி மண் வளத்தை உயர்த்துவற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியருக்கு விருது வழங்குதல்" – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை-உழவர் நலத் (வேபொ2) துறை

சோபகிருது வருடம், வைகாசி 1 நாள், திருவள்ளுவர் ஆண்டு 2054

அரசாணை (நிலை) எண்.89 நாள் : 15.05.2023

படிக்க

1. அரசாணை (Ms)எண்.50, தொழில் (MMC1)துறை, நாள் 27.04.2017.
2. அரசாணை (Ms) எண்.244, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம் (MMC1) துறை நாள்.14.12.2022.
3. அரசு தலைமைச் செயலர் அவர்களின் நேர்முக கடித எண்.8908/வேபொ2/2022-2, நாள் 14.02.2023.
4. மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் 2023-2024 வேளாண் நிதிநிலை அறிவிப்புகள் நாள் 21.03.2023.
5. வேளாண்மை இயக்குநர், அவர்களின் கடித எண்.பொது2/20328/2023, நாள் 20.04.2023.

---

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 2023-24 ஆம் ஆண்டு வேளாண்மை-நிதி நிலை அறிக்கையில் வரிசை எண்.4(இ)-ல் கீழ்க்கண்ட திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது:-

"ஏரிகள், குளங்களில் படிந்துள்ள வண்டல் மண்ணில் மண்வளத்திற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளதால் மாநில அரசு, அந்தந்த கிராமத்தில் உள்ள விவசாயிகள் குளத்து வண்டல் மண்ணை இலவசமாக எடுத்து தங்கள் வயல்களில் பயன்படுத்துவற்கு சென்ற ஆண்டே அனுமதித்து 15 லட்சம் கன மீட்டர் வண்டல் மண் எடுக்கப்பட்டு 12,500 விவசாயிகள் பயனடைந்தனர். இதே போன்று நடப்பாண்டிலும் நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மூலம் தகுதியான ஏரிகள் குளங்கள் கண்டறியப்பட்டு

விவசாயிகள் இடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வண்டல் மண்ணை விளை நிலங்களில் பயன்படுத்துவற்கு அரசு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளும் விவசாயிகள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில் காலதாமதம் இன்றி சிறப்பாக மேற்கொள்ளும் மாவட்ட ஆட்சியர்களுக்கு விருது வழங்கப்படும்."

2. குறிக்கோள்:

| | |
|---|---|
| அ. | ஏரிகள், குளங்களில் படிந்துள்ள வண்டல் மண்ணை தூர்வாரி விவசாய நிலங்களுக்கு இட்டு மண்வளத்தை மேம்படுத்துதல். |
| ஆ | நீர் நிலைகளின் இயல்பான கொள்ளளவை தக்க வைத்து சரியான நேரத்தில் விவசாயிகளுக்கு பாசனத்திற்கு பயன்படுத்த உதவுதல் |

3. திட்டம் செயல்படுத்தும் முறை:-

ஏரிகள், குளங்களில் படிந்துள்ள வண்டல் மண்ணை விவசாய நிலங்களுக்கு இடும் பணியினை நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் வேளாண்மைத் துறையினரால் இணைந்து கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்.

| வ. எண். | திட்டம் செயல்படுத்தும் முறை | துறைகள் |
|---|---|---|
| i. | மாவட்டத்தில் வேளாண் பயன்பாட்டிற்கு தேவையான வண்டல் மண் அதிகம் படிந்துள்ள ஏரிகள்/குளங்களை கண்டறிதல் | நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை |
| ii. | கண்டறியப்பட்ட ஏரிகள் / குளங்களில் உள்ள அதிகப்படியான வண்டல் மண் அளவின் எல்லை மற்றும் அளவினை மதிப்பீடு செய்தல் | நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை |
| iii. | மாவட்ட அரசிதழில் வண்டல் மண் எடுக்க தகுதியான ஏரிகள்/ குளங்களின் பட்டியலை வட்டார வாரியாக /கிராம வாரியாக பிரசுரித்தல் | நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை |
| iv. | வட்ட/வட்டார வாரியாக, குறுவட்ட வருவாய் தலைமையிடங்களில் உழவர்களுக்கு சிறப்பு வேளாண்மை முகாம் நடத்தி விவசாயிகளிடமிருந்து விண்ணப்பத்தினை பெற்று கிராம நிர்வாக அலுவலரிடம் பரிந்துரை பெற்று வட்டாச்சியரிடம் சமர்ப்பித்தல் | புவியியல் மற்றும் சுரங்கத்துறை, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, வேளாண்மை-உழவர் நலத்துறை, நீர்வள ஆதாரத்துறை |
| v. | தகுதியான உழவர்களுக்கு வட்டாச்சியரால் வண்டல் மண் எடுத்திட அனுமதி வழங்குதல் | புவியியல் மற்றும் சுரங்கத்துறை, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, |

| | | |
|---|---|---|
| vi. | நீர்வள ஆதாரத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையால் ஏரி/குளங்களில் இருந்து வண்டல் மண் வழங்குதல் | நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை |
| vii. | வண்டல் மண்ணை வயலில் இடுவதற்கு முன்பும் பின்பும் மண்வளம், விளைச்சலை ஆவணப்படுத்துதல் | வேளாண்மை-உழவர் நலத்துறை |

4. இத்திட்டத்தில் சிறப்பாக செயலாற்றும் மாவட்ட ஆட்சியரை தேர்வு செய்யும் விதிமுறைகள் :-

i. நீர்வள ஆதாரத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் வண்டல் மண் எடுக்க தகுதியான ஏரிகள், குளங்கள் கண்டறியப்பட்டு, அரசிதழில் வெளியிடும் பணியினை ஜீன் மாதத்திற்குள் முடித்திட வேண்டும்.

ii. வேளாண்மைத்துறை வாயிலாக கிராம அளவில், விழிப்புணர்வு முகாம்கள், பத்திரிக்கைச் செய்தி, உள்ளூர் தொலைக்காட்சிகளில் அறிவிப்பு போன்றவை அதிக அளவில் நடத்தி இருக்க வேண்டும்.

iii. விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்களை சரிபார்த்து காலதாமதமின்றி அரசு நிர்ணயித்துள்ள விதிகளுக்கு உட்பட்டு தாமதமின்றி செப்டம்பர்-15 ம் தேதிக்குள் ஒப்புதல் வழங்கியிருக்க வேண்டும்

iv. வண்டல் மண் எடுக்கும் பணியினை கண்காணிக்க வட்ட அளவில் துணை ஆட்சியர் நிலை அலுவலர்களை நியமித்து நீர்வள ஆதாரத் துறை, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை மற்றும் வேளாண்மைத் துறைகளை தொடர் ஆய்வு மேற்கொண்டு பருவமழை துவங்குவதற்கு முன்னர் அக்டோபர் இரண்டாம் வாரத்திற்கு முன்பு பணியினை முடித்திருக்க வேண்டும்,

v. விவசாயிகளுக்கு வண்டல் மண்ணை எடுத்து செல்லும் செலவீனத்தை குறைக்கும் நோக்கத்தில், வேளாண் பொறியியல் துறையின் கீழ் உள்ள வேளாண் இயந்திரங்கள்/தனியார் நிறுவனத்தின் நிறுவன சமுதாய பொறுப்பு (CSR) நிதியிலிருந்து வண்டல் மண் எடுக்க உபயோகப்படுத்த வேண்டும்.

vi. மாவட்ட ஆட்சியரிடமிருந்து இவ்வரசாணையில் இணைப்பில் உள்ள படிவத்தின்படி பெறப்பட்ட வாராந்திர அறிக்கையின் அடிப்படையில் முதல் மூன்று இடங்கள் விருதுக்காக தேர்வு செய்யப்படும்.

5. மேலும், இத்திட்டத்தில் அரசு விதிமுறைகளின்படி மாவட்டத்தில் அதிக அளவிலான ஏரிகள்/குளங்களை வண்டல் மண் எடுப்பதற்கான அறிவிக்கை செய்து, கிராமப்புறங்களில் அதிக அளவில் விளம்பரப்படுத்தி, விவசாயிகளிடம் அதிக அளவில் விண்ணப்பம் பெற்று ஒப்புதல் அளித்து பருவமழை காலத்திற்கு

முன்பு அதிக அளவில் வண்டல் மண் வழங்கி முதல் மூன்று இடத்தை பிடித்த மாவட்ட ஆட்சியர்களுக்கு இவ்விருது வழங்க அரசு ஆணையிடுகிறது.

6. இப்பணியினை சிறப்பாக செய்து முடிக்கும், முதல் மூன்று மாவட்ட ஆட்சியர்களுக்கு வரும் ஆண்டுகளில் டிசம்பர் மாதம் 5-ஆம் தேதி உலக மண்வள தினத்தில் / உலக நீர்வள தினமான மார்ச்-22 ல் இவ்விருதினை வழங்கிட அனுமதி அளித்து அரசு ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை-35.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

நகல்:
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர்அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை - 9.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அ.ந.மு-3/வ மற்றும் தி) துறை, சென்னை -9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 16/5/23

16/5/23

(அ.ஆ.(நிலை) எண்.89, வேளாண்–உழவர் நலத் (வேபொ2) துறை, நாள்.15.05.2023)
நீர்நிலைகளில் உள்ள வண்டல் மண் வாருதல் குறித்த அறிக்கை. படிவம் –I
(அரசாணை (Ms). எண்.50 தொழில் (MMC1) துறை. நாள். 27.04.2017)
(அரசாணை (Ms) எண்.244, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம் (MMC1) துறை. நாள் 14.12.2022.)

மாவட்டம்:

| வட்டம் | மாவட்டம் | மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/குளங்களின் எண்ணிக்கை 28.02.2023 வரை | | | மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/ குளங்களின் எண்ணிக்கை 01.03.2023 முதல் | | | மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/ குளங்களின் மொத்த எண்ணிக்கை | | | 01.03.2023 முதல் வண்டல் மண் தூர்வாருதல் ஆரம்பிக்கப்பட்ட ஏரிகள்/குளங்களின் எண்ணிக்கை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | 28.02.2023 வரை அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/ குளங்கள் | | | 01.03.2023 முதல் அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/குளங்கள் | | | மொத்தம் | | |
| | | நீர்வள ஆதாரத்துறை | ஊரக வளர்ச்சித் துறை | மொத்தம் | நீர்வள ஆதாரத் துறை | ஊரக வளர்ச்சித் துறை | மொத்தம் | நீர்வள ஆதாரத் துறை | ஊரக வளர்ச்சித் துறை | மொத்தம் | நீர்வள ஆதாரத் துறை | ஊரக வளர்ச்சித் துறை | மொத்தம் | நீர்வள ஆதாரத் துறை | ஊரக வளர்ச்சித் துறை | மொத்தம் | நீர்வள ஆதாரத் துறை | ஊரக வளர்ச்சித் துறை | மொத்தம் |
| 1 | 2 | 3 | 4 | 5 (3+4) | 6 | 7 | 8 (6+7) | 9(3+6) | 10(4+7) | 11 (9+10) | 12 | 13 | 14 (12+13) | 15 | 16 | 17 (15+16) | 18 (12+15) | 19 (13+16) | 20 (18+19) |
| | | | | | | | | | | | | | | | | | | | |

| வண்டல் மண் தூர் வாருதல் பணி ஆரம்பிக்கப்பட வேண்டிய ஏரி/குளம் எண்ணிக்கை | | | தூர்வாரப்பட்ட வண்டல் மண்ணின் அளவு(கனமீட்டர்) | | | | | | மொத்தமாக வண்டல் மண் தூர்வாரப்பட்ட அளவு (கனமீட்டர்) | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை | | | | | | மொத்தமாக பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 28.02.2023 வரை அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/குளங்கள் | | | 01.03.2023 முதல் அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/குளங்கள் | | | | நீர்வள ஆதாரத்துறை | | | ஊரக வளர்ச்சித்துறை | | | |
| நீர்வள ஆதாரத் துறை | ஊரக வளர்ச்சித் துறை | மொத்தம் | நீர்வள ஆதாரத் துறை | ஊரக வளர்ச்சித் துறை | மொத்தம் | நீர்வள ஆதாரத் துறை | ஊரக வளர்ச்சித் துறை | மொத்தம் | | 28.02.2023 வரை அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/ குளங்கள் | 01.03.2023 முதல் அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/ குளங்கள் | மொத்தம் | 28.02.2023 வரை அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/ குளங்கள் | 01.03.2023 முதல் அறிவிக்கை செய்யப்பட்ட ஏரிகள்/ குளங்கள் | மொத்தம் | |
| 21 (9–18) | 22 (10–19) | 23 (21+22) | 24 | 25 | 26 (24+25) | 27 | 28 | 29 (27+28) | 30 (26+ 29) | 31 | 32 | 33 (31+32) | 34 | 35 | 36 (34+35) | 37 (33+36) |
| | | | | | | | | | | | | | | | | |

குறிப்பு : வண்டல் மண்ணை விவசாய நிலங்களுக்கு உரிய காலத்தில் பயன்படுத்தும் வகையில், போதுமான விழிப்புணர்வு முகாம்கள், செய்தி வெளியீடு, விவசாயிகளுக்கு பயிற்சி போன்ற விரிவாக்கப் பணிகள் பற்றிய புகைப்படம் மற்றும் அது தொடர்பான விபரங்கள் கருத்துருவுடன் இணைக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சியர்
--------------------------------
-----------மாவட்டம்

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//